www.padippakam.com

# பொதுமை

மலர் 2 இதழ் 6
அன்பளிப்பு ரூபாய் 2
20-7-85
வெளியீடு:
ஈழப்புரட்சி அமைப்பு
EROS

ஈழத்தில் 20-5-85 வெளியான இவ்விதழ் கடல் கடந்து வாழும் தோழர்களுக்காக, சென்னையில் மறுபதிப்புச் செய்யப்பட்டு 20-7-85 அன்று வெளியிடப்பட்டது.

# தென் ஈழத்தில் இடம் பெற்ற கலவரங்களின் பின்னணியில் கறைபடிந்த கரங்கள் எவை?

அண்மைக் காலத்தில் தென் ஈழத்தைச் சார்ந்த மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் தமிழ் பேசும் மக்களிடையே ஏற்பட்ட கலவரம் பற்றியும், அதன் பாதிப்புகள் பற்றியும், பொதுவாகவும் பரவலாகவும் ஈழப் பிரதேசமெங்கும் கவலை தோய்ந்த அக்கறை

சந்தேகமும் சிறுபான்மையினரான தம்மை அங்கே அடக்கி விடுவார்களோ என்ற ஐயம் இசுலாமியரிடையேயும் இருந்து வந்துள்ளது. எனினும் இவை பின்னணிக் காரணிகளாக இருக்கின்ற போதும் உடனடிக் காரணங்களாய் வாய்த்தவை எவை?

கொண்டும் நடவடிக்கைகளில் இறங்கினர். இந்த நிலையில் வட பகுதி ஈழவர் கிழக்கைப் புறக்கணிக்கின்ற உண்மையையும், இராசதுரைக்கு இழைக்கப்பட்ட அநியாயத்திற்கு' நீலிக்கண்ணீர் வடித்தும், மேலும் தமிழ் மக்களிடையே வேறுபாட்டை வளர்க்

பெரிய விடுதலை இயக்கமாக விளங்கி, முற்போக்கு சக்திகளின் நல்லபிமானத்தை பெற்று நிற்கும், பாலஸ்தீன விடுதலை இயக்கமும் 'பயங்கரவாதத்தின் தாபகர்கள் என்பது அமெரிக்க-இசுரேலிய இலங்கை கூட்டுறவின் வெளிப்பாடே அன்றி

## போராட்டச் சக்திகளின் கருத்து

மேற்படி நிலைமைகளைப் பரிசீலித்த ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ENLF) தமிழ் பேசும் மக்

கிழக்கில் இடம்பெற்ற சம்பவங்களுக்கு அரசுடன், இஸ்ரேலியரும் இணைந்து பின்னணியில் இயங்குகின்றனர்.
-சாத் முத்தட்டுவேகம

தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒரு குழுவே கலவரத்தினை வழிநடத்துகின்றது
-தொண்டமான்

முஸ்லிம் மக்களும்-தமிழ் மக்களும் கலந்து வாழும் கிழக்கிலங்கையை கருத்திற் கொள்ளா விடின் வடபகுதி பயங்கரவாதிகளுடன் அரசு பேசத்தயார்.
-லலித்

காரைதீவு-அக்கரைப்பற்று சம்பவங்களில் வெளிமாவட்டத்திலிருந்து வந்த பலர் ஈடுபட்டனர் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் மொசாட் உளவுப் படையினரே அசம்பாவிதங்கள் ஏற்படக் காரணம் என்ற கூற்றில் உண்மையுண்டு.
-ஜனாப். எம். சி. அகமட்

முஸ்லிம்களையும் தமிழர்களையும் பகைமைப்படுத்த தீயசக்திகள் சூழ்ச்சி.
-முஸ்லிம் பிரமுகர் குழு

கிழக்குப் பிராந்தியத்தின் முஸ்லிம்-தமிழர் மோதல்களுக்கு வெளிநாட்டு சக்திகள் பின்னணி
-தேவநாயகம்

காணப்படுகிறது. இக்கலவரங்களில் வெளியார் சக்திகள் - தீய சக்திகள் தலையீடு இருந்ததாக அரச மட்டத்தில் இருந்து கருத்து வெளியிடப்பட்டது. ஆனால் இவ் வெளிச் சக்திகள் எது என்பதில் அமைச்சரவைக்குள்ளேயே மாறுபாடான கருத்து நிலவியபோதும், பின்னர் பயங்கரவாதிகள் தலையில் பட்டம் சூட்டப்பட்டது. ''பயங்கரவாதிகள்'' செயலுக்கு ஆதரவளிக்க இசுலாமியர் மறுத்ததன் விளைவே கலவரம் என்றும், இன்னும் பலவாறாகவும் அரச ஊதுகுழல்கள் எடுத்தோதின. இந்நிலையில் அரசின் சதிகளை அம்பலமாக்கி, தமிழ்பேசும் மக்கள் - ஈழத்தில் வாழும் மக்கள் அதாவது ஈழவர் என்ற அடிப்படையில் ஒன்று திரட்டி, அடக்குமுறை அரசை முறியடிக்க வேண்டிய கடமைப்பாடு எமக்குண்டு.

தமிழைத் தமது தாய்மொழியாகக் கொண்ட இசுலாம் - இந்து -கிறிஸ்தவ மதப்பிரிவுகளைச் சார்ந்த மக்கள் மட்டக்களப்பு, அம்பாறை, பிராந்தியங்களில் அடுத்தடுத்த கிராமங்களிலும், ஒரே கிராமத்தில் கலந்தும் கூட வாழ்கின்றனர். அரசியல் ரீதியாக தமிழ் பேசும் மக்களைப் பிரதிபலித்த கூட்டணித் தலைமை இழைத்த தவறுகளும், இசுலாமியரைப் பிரதிபலிக்கும் கொழும்பை மையமாகக் கொண்ட தரகு முதலாளியத் தலைமையின் தன்மைகளும் இவ்விரு சார்பான மக்களிடையிலும் சில கசப்புணர்வுகள் தோன்றுவதற்கு வழி வகுத்திருந்தன. இதனை அடியொற்றி இசுலாமிய மக்களனைவரும் அரசுக்கு ஆதரவானவர்கள் என்பதுபோல் இந்து தமிழ் மக்களிடையில் ஒரு

## வெளிச் சக்திகளின் தலையீடு

விடுதலை இயக்கங்கள் எனப்படும் சிலரின் அடாவடித்தனமான செயற்பாடுகளைக் கண்டித்த அக்கரைப்பற்றில் வாழும் பொது மக்கள் சிலர், இயக்கங்கள் மீது தமக்கு இருக்கும் வெறுப்பை காட்டும் நடவடிக்கைகளில் இறங்கினர். இதே காலப்பகுதியிலும் இதற்குப் பின்னரும் கூட யாழ்ப்பாணத்திலும் இதே போல் இயக்கங்கள் மீது எதிர்ப்பைக் காட்டும் கடையடைப்பு, ஹர்த்தால், என்பன நடந்தேறின. ஆனால் அக்கரைப்பற்றில் தென்னிலங்கையிலிருந்து வரவழைக்கப்பட்டோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டு, இவ் ஊர்வலம் ஏற்கனவே திட்டமிடப்பட்டு ''ரூபவாஹினி'' குழுவினர் படம் பிடித்து ஒளி பரப்பி கலவரம் ஒன்றிற்கான தூபம் இடப்பட்டது. இதே வேளை மன்னாரில் போராளிகளையும், போராட்ட நடவடிக்கைகளையும் காட்டிக் கொடுப்போர் என்ற வகையில் சுடப்பட்ட மூன்று இசுலாமியரை சுட்டிக்காட்டியும், பள்ளிவாசலில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டதாக ஒரு போலிப் பிரசாரத்தை முடுக்கி விட்டும், இன்னும் பலவாறாகவும் கலவரம் ஒன்று தூண்டப்பட்டது. அதே வேளை காடையரை அடக்க வரவழைக்கப்பட்ட அதிரடிப் படையும் இன்னும் உள்ள ஆயுதப்படையும் சேர்ந்து கொண்டு காரைதீவு போன்ற கிராமங்களைச் சூழ்ந்து வீடுகளுக்கு தீயிட்டும், ஹெலிக்காப்டரில் இருந்து துப்பாக்கி பிரயோகம் மேற்கும் விதமுமாக பல துண்டுப்பிரசுரங்களை ஹெலிக்காப்டர் கொட்டியது.

## கலவரத்தை தூண்ட வேண்டிய காரணம்

இவ்வாறாக, அரசும் அதன் சார்பு சக்திகளும் கலவரத்தை திட்டமிட்டுத் தூண்ட வேண்டிய அவசியமென்ன? ஒன்று திரண்ட மக்கள் சக்திக்கு ஈடு கொடுக்க முடியாது என்பதை உணர்ந்த அரசு மக்களைப் பிரித்து மோத வைப்பது என்ற பிரித்தாளும் கொள்கையை அமுல் நடத்த விழைந்தது முதல் காரணம். இத்தகைய மோதல் ஒன்றை அடக்குதல், அமைதி ஒன்றை நிலைநாட்டுதல், என்ற பெயரில் இசுலாமிய மக்களின் ''காவலன்'' போலவும் ''ஆபத்பாந்தவன்'' போலவும் அரசு நடப்பதன் மூலம் அரசு தனது செல்வாக்கைத் தக்க வைப்பதோடு விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகளாகச் சித்தரிப்பதும் ஆகும்.

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பால் பயிற்றுவிக்கப்பட்ட போராளிகளே இசுலாமிய எதிர்ப்புக்கும் கலவரத்திற்கும் காரணம் என்று காட்டுவதன் மூலம் இசுரேலிய மொசாட்டினை அழைத்ததால் எழுந்த இசுலாமியர்களின் கொதிப்பை தணிப்பது இரண்டாவது காரணம். அரபு தேசியவாதத்தின் ஊற்று மூலமும் போர்க்குணம் கொண்ட இசுலாமியரின் ஏகோபித்த ஆதரவையும் பெற்றுள்ளதோடு, உலகின் மிகப் வேறில்லை.

திகவாபி, கொம்பநாச்சி சிங்கள குடியேற்றங்களினாலும், அரசின் இனவாத ஒடுக்கு முறைகளினாலும், இம்மக்கள் வாழும் பிரதேசங்களில் ஆயுதப்படைகளின் அடாவடித்தனத்தாலும் இது போன்ற பல வேறான காரணங்களால் இசுலாமிய மக்களிடையே செல்வாக்கை இழந்து வரும் கொழும்பு வர்த்தகத் தலைமையினைக் காப்பாற்ற - இந்த தலைமைகளை நோக்கி மக்கள் ஈர்க்கப்பட இவ்வாறான ஒரு கலவரம் அவசியமாக இருந்தது. பிறிதொரு காரணம். கிழக்கிலங்கையின் பாராளுமன்ற அரசியல்வாதிகள் அரசுக்கு சாதகமாக இருப்பதன் காரணத்தாலும் பல சமூக மக்கள் கலந்து வாழுவதன் காரணத்தாலும் கிழக்கிலங்கையில் ஈழப்போராட்டச் சக்திகளுக்கு ஆதரவில்லை எனக் காட்டும் ஒரு நோக்கமும் இக்கலவரத்தின் பின்னணியில் இருந்தது. இதனை மையமாகக் கொண்டே அண்மையில் லலித் கிழக்கிலங்கையை பயங்கரவாதிகள் கைவிட்டால் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தயார் என அறிவிப்புச் செய்தார். ஆனால் ஈழப்போராட்டத்தின் ஆரம்பம் தொட்டு ஆராய்ந்து பார்த்தால் கிழக்கின் மக்களனைவரும் ஈழத்தை அங்கீகரித்து ஈழப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றது துலாம்பரமாகத் தெரியும். இந்த வகையில் சிந்தித்துப் பார்க்கும்போது அரசு தான் இக்கலவரத்தைத் தூண்டி விட்டு பின்னணியில் இருந்து செயற்பட்டது என்பது எவருக்கும் புரியக் கூடிய ஒன்றாகும்.

கள் என்ற அடிப்படையில் ஒன்றுபட்டு, அரசின் சதிகளை அம்பலமாக்கி ஈழப் போராட்டத்தை முன்னெடுப்போம் என வேண்டுகோள் விடுத்து துண்டுப் பிரசுரம் வெளியிட்டது.

புத்தளம் பள்ளிவாசல் படுகொலையில் ஆரம்பித்து, வேக்கந்த பள்ளிவாசல் கலவரங்களூடாகத் தொடர்ந்து ஏழை இசுலாமிய விவசாயிகளின் நிலங்களை திகவாபி, கொம்பநாச்சி போன்ற இடங்களில் ஆக்கிரமித்து. இன்னும் பலவாறாகவும் இனவாத அரசின் அடக்கு முறைக்கு பலியாகி இவ்வொடுக்கு முறையை அனுபவிக்கும் மக்கள் என்ற வகையில் ஒன்றுபட்டு போராடுவோம்.

ஈழமண்ணை அபகரிக்கும் குடியேற்றங்களை வன்மையாகக் கண்டிப்பதையும் ஈழப்போராட்டத்தை ஒடுக்க வந்த மொசாட்டின் வருகையை பூரணமாக எதிர்த்துக் கொந்தளித்துக் கிளம்பியதையும் ஈழப் போராளிகளும் போராட்ட வரலாறும் மறந்தும் மறந்துவிட முடியாது.

எனவே நடந்துவிட்ட சம்பவங்களைப் புரிந்து கொண்டு அரசிற்கு எதிராக ஐக்கியப்பட்டு ஈழப் போராட்டத்தை முன்னெடுப்போம். ஈழத்தை வென்றெடுப்போம்.

''மதத்தால் இந்துவானாலும்
மாண்பில் முஸ்லிம் என்றாலும்
வேதம் பயிலும் கிறிஸ்தவனும்
தீரச்சைவன் ஆனாலும்
ஈழத் தமிழர் ஈழவரே
அவர் எங்கிருந்தாலும் நம்மவரே''

கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாய் உருவெடுக்கும்

படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

## ஈரோஸ் தாக்குதல்

### 34 அரச பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்

கிரான்

20-5-85 அன்று தென் ஈழப் பகுதியினைச் சார்ந்த மட்டக்காப்பு பிரதேசத்தை அடுத்த கிரான் பகுதியில் ஈரோஸ் கெரில்லாக்களால் தாக்குதல் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. மூன்று வாகனங்களில் விரைந்த அரச பயங்கரவாதிகள் ஈரோஸ் கெரில்லாக்களின் கண்ணி வெடித் தாக்குதலுக்கு உள்ளாகினர். இதில் இரு வாகனங்கள் முற்றாக சேதமாக்கப்பட்டதுடன், தப்பிய மூன்றாவது வாகனம் மீது தொடர்ந்த சாரமாரி குண்டுத் தாக்குதலாலும் 34 அரச பயங்கரவாதிகள் வரை உயிரிழந்தனர். ஈரோஸ் கெரில்லாக்களின் தொடர்ச்சியான இத்தாக்குதலின் போதும் கெரில்லாக்களின் சார்பில் எவ்வித இழப்பும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் குண்டு வெடிப்பு

கொழும்பு

கொழும்பிலும், அதன் சுற்றுப்புறங்களிலும், கட்டுநாயக்காவிலும் மே தினத்தன்று ஈரோஸ் - பல குண்டுகளை வெடிக்க வைக்க உள்ளதாகத் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக இலங்கைத் தேசிய பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி ஒரு குண்டைத்தூக்கிப் போட்டு தொழிலாளர்களின் மேதினக் கொண்டாட்டங்களை முறியடிக்க முயற்சித்தார். இவரின் கூற்றுக்குப் பதில் கொடுக்கவும், அதே நேரம் இராணுவத் தலைமை அலுவலகத்தினுள் நடைபெறவிருந்த விருந்தையும் கருத்திற் கொண்டு 29-04-85 அன்று இரவு 8.20 மணிக்கு குண்டு வெடிக்க வைக்கப்பட்டது. விருந்தில் கலந்து கொண்ட இராணுவ ஆலோசகர்கள் நால்வரும், காவல் புரிந்து கொண்டிருந்த இராணுவ வீரர் இருவருமாக அறுவர் கொல்லப்பட்டனர். மேலும் அலுவலகத்தினுள் இருந்த சட்ட நூல்கள் மற்றும் பல ஆவணங்கள் பலவும் எரிந்ததுடன் ,கட்டடத்தின் ஒரு பகுதி சேதமடைந்தும் உள்ளது. அத்துடன், அருகாமையில் இருந்த ஹோட்டல்கள் தாஜ் சமுத்திராவும், இன்டர் கொன்ரினன்ரலும் சேதம் அடைந்துள்ளன.

### பொலிஸ் அதிரடிப்படை மீது தாக்குதல் 30 அரச பயங்கர வரதிகள் பலி

கோமாரி

26-04-85 அன்று இராணுவ முகாம் நோக்கி மூன்று வாகனங்களில் விரைந்த பொலிஸ் அதிரடிப் படையினர் ஈரோஸ் கெரில்லாக்களினால் மேற்கொள்ளப்பட்ட நிலக் கண்ணி வெடித் தாக்குதலுக்கு இலக்காயினர். இத்தாக்குதலில் அதிரடிப் படையினர் பயணம் செய்த இரு வாகனங்களும் முற்றாகச் சேதமாக்கப்பட்டது. நடைபெற்ற கண்ணி வெடிப்பினைத் தொடர்ந்து கெரில்லாக்களின் துப்பாக்கிப் பிரயோகம் என்பவற்றிற்கு முப்பது வரையிலான அரசபயங்கரவாதிகள் பலியாகினர். ஈரோஸ் கெரில்லாக்கள் எவ்வித இழப்புமின்றி மீண்டனர்.

## அகதிகளின் குரல்

ஈழத்திலிருந்து அகதிகளாக வெளியேறி தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள் மத்தியிலிருந்து 'அகதிகளின் குரல்' என்ற பத்திரிகை வெளிவரப்போவதாகத் தகவல் கிடைத்துள்ளது. இவர்களது துண்டறிக்கையின் கூற்றின்படி இப்பத்திரிகையினதும் இவர்கள் செயற்பாடுகளினதும் நோக்கங்களாக பின்வருவன அமைவதாகத் தெரியவருகிறது.

'அகதிகளாக அலைந்து கொண்டிருக்கும் நிலையை தம்மால் மேலும் பொறுத்துக்கொள்ள முடியாது. எமது தாய் நாட்டுக்கு திரும்பிச் செல்வது பற்றியும் அவ்வாறு திரும்பிச் செல்லும் போது தமக்குத் தேவையான நிவாரணங்களை தமது சொந்தக் கரங்களாலேயே முன்னெடுக்கப் போவதாக' தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த விதமான தங்களது முயற்சிகளை மகிழ்வுடனும் எதிர்கால நம்பிக்கையுடனும் தொலைநோக்குடனும்; தமது ஈடுபாட்டை ஆதரிக்கும் அனைத்து மக்கள், அறிவுஜீவிகள், அமைப்புகள், சர்வதேசநிறுவனங்கள் என்பவற்றின் முழு ஒத்துழைப்போடு முன்னேற்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையிலேயே தமது முதற்படியாக ''அகதிகளின் குரல்'' என்ற பத்திரிகையை வெளியிடப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரத்த ஜூலை.

1983 ஜூலை 25-27 இல் கொடூரமாக நடந்த வெலிக்கடைப்படுகொலையை முன்னிட்டு 'இரத்த ஜூலை' என்ற சுவரொட்டி ஈழத்தேசிய விடுதலை முன்னணியினால் (ENLF) ஈழப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்பேசும் மக்களின் மனதைவிட்டகலாத வெளிப்பாட்டினை சித்தரிக்கும் முகமாக வெளிப்படுத்தப்பட்டது.

### திம்புபேச்சுவார்த்தை எதிர்ப்பு: மக்கள்

18—07—85

* பேச்சுவார்த்தை தொடர்பாக இலங்கையின் வடக்கில் மன்னார் மாவட்டத்தில் லொறிகளிலும் மோட்டார் சைக்கிளிலுமாக நூற்றுக்கும் அதிகமானவர் ஊர்வலமாகச் சென்று பூட்டான் பேச்சுவார்த்தை பற்றிய தமது எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர். அங்கு வைக்கப்பட்ட கோஷங்களாக ''நாங்கள் திம்புப் பேச்சுவார்த்தையைஎதிர்க்கிறோம்''—''பேச்சுவார்த்தைஎன்பது நடைமுறைச்சாத்தியமானதல்ல''என்பவை முன்வைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

### திம்பு பேச்சுவார்த்தை எதிர்ப்பு: மாணவர்கள்



எழுச்சிமிக்க ஈழவிடுதலைப் போராட்டம் யுத்த நிறுத்தம் மூலம் மழுங்கடிக்கப்பட்டதனை சகிக்க முடியாத மாணவர்கள் 2-7-85 அன்று மானிப்பாயூடாக கொக்குவில் வரையில் வந்த ஊர்வலத்தின் ஆர்ப்பாட்டமான காட்சி.
ஒடுக்குமுறையினால் சகிக்கமுடியாத பெண்களின் எழுச்சி மிக்க ஊர்வலம்.

### இராணுவ முகாம் மீது தாக்குதல் முயற்சி

TELO. கொக்காவில்

கிளிநொச்சி பிரதேசத்தைச் சார்ந்த கொக்காவிலில் நிலைகொண்டிருந்த இராணுவ முகாம் தாக்குதல் முயற்சியினைக் கடந்த 9-5-85 அன்று தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) மேற் கொண்டது. தவிர்க்க முடியாத சில தந்திரோபாயங்களை எதிர்கொள்ள முடியாத தமிழீழ விடுதலை இயக்க இராணுவம் பின் வாங்கிய போதும் பல அரச பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தாக்குதல் முயற்சியின் போது உயிரிழந்த ஒன்பது விடுதலை வீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்வதுடன் துயரில் பங்கேற்கிறோம்.

### கடற்படை முகாம் மீது ஈ.பி.ஆர்.எல்.எப். தாக்குதல்

EPRLF காரைநகர்

03-05-85 அன்றிரவு 9.35 மணியளவில் காரைநகரில் 16ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்த பிரதான கடற்படை முகாம் (எல்லாளன் பிரிவு - Elara regiment) மீது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இராணுவப் பிரிவினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் பல கடற்படை வீரர்கள் பலியானதாக அறிகிறோம். ஏழுமணி நேரம் நீடித்த இத்தாக்குதலில் போராளிகள் அறுவர் பலியானதாகத் தெரிகிறது.

சக தோழர்களினதும், குடும்பத்தினதும் துயரத்தில் பங்கேற்கும் நாம்,குறிப்பாக தோழர் செல்வராசா (சின்னவன்) வுடன் பழகிய இனிய நாட்களை நினைவு கூர்ந்து இந்நேரடிச் சமரில் உயிரிழந்த தோழர்களுக்காக எமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

## இன்னுயிர் ஈந்தும்



தோழன் சாம்சன்

☐ 30-04-85 ல் கடலில் இடம் பெற்ற விபத்தொன்றில் எமது தோழன். சாம்சனை இழக்க நேரிட்டதுயரை பகிர்ந்து கொள்கிறோம். 1959 ஆகஸ்ட் 8ம் திகதி மன்னாரில் பிறந்த இராசநாயகம் பெனிஸ்டாஸ் சிறில் (சாம்சன்) ஒரு பொறியியல் பட்டதாரியாவான். இவன், 1978 — ல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் புகுந்து 1982 — ல் பொறியியல் பட்டதாரியாக வெளியேறினான். அனுராதபுரம் நீர்ப்பாசன இலாகாவில் பொறியியலாளனாக கடமையாற்றிய இவன் 1983 ல் இடம்பெற்ற ஜூலை கலவரத்தின் போது தனது இனத்தவருக்கு ஏற்பட்ட கதிகண்டு கலங்கி, தனது கடமையை உதறித் தள்ளி இனத்தின் விடுதலைக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயற்பட்டான், ஈரோசுடன் தன்னை இறுகப் பிணைத்துக் கொண்டு இயக்க வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்திற்காகவும், சுறுசுறுப்புடன் செயற்பட்ட முன்னோடியாவான். இவனது இழப்பு ஈடுசெய்யப்பட முடியாத பேரிழப்பாகும். அவன் காட்டி வந்த துடிப்போடும் சுறுசுறுப்போடும் தொடர்ந்தும் செயற்படுவதன் மூலம் அவனுக்கு எமது வீரவணக்கத்தை காணிக்கையாக்குவோம்.

☐ ஏப்ரல் 1ம் திகதியன்று பொத்துவிலில் அரச பயங்கரவாதிகளுடன் ஏற்பட்ட ஒரு நேரடி சமரின் போது தோழன் ரமேஷ் தன் உயிரை ஈந்தான். எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சமரில் நேருக்கு நேர் நின்று இறுதிவரை போராடி இரு அரச பயங்கரவாதிகளைக் கொன்ற அத்தோழன் மீது அரச பயங்கரவாதிகள் தீர்த்த சரமாரியான வேட்டுகளால் அவனுயிர் பிரிய நேரிட்டது என்பதைக் கவலையோடு தெரியத்தருகின்றோம்.

மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழன் ரமேஷ் ஈரோசுடன் தன்னை இறுகப் பிணைத்துக் கொண்ட முன்னோடிகளில் ஒருவனாவான். மலையகத்தின் அடிப்படை மக்களின் விடிவு, ஈழப் போராட்டத்திலேயே தங்கியிருக்கின்றது என்பதை உணர்ந்து. செயற்பட்ட இவன்,தனது மக்களின் மேன்மைக்காகப் போராடத் தன்னை முழுமையாக அர்ப்பணித்தவன். சதா சிரித்த முகமும், அன்பாகப் பழகும் தன்மையும், தன்னைப் பொருட்படுத்தாத அர்ப்பணிப்பும் கொண்டு செயற்பட்ட இத்தோழனின் இனிய நினைவுகளை நெஞ்சில் தேக்கி, தொடர்ந்தும் அந்த மக்களின் விடுதலைக்காக உழைப்பதன் மூலம் எமது வீரவணக்கத்தை காணிக்கையாக்குகின்றோம்.

### அமெரிக்காவின் உளவறியும் ஒலிபரப்பு நிலையம்

சிலாபம்

கடந்த டிசம்பர் மாதம் 1983 இல் ஐக்கிய அமெரிக்காவும் ஸ்ரீலங்காவும் கைச்சாத்திட்டுக் கொண்ட உடன்படிக்கையின்படி சிலாபத்தில் அமைக்கப்பட இருக்கும் ஒலிபரப்பு நிலையம் ஐக்கிய அமெரிக்காவிற்கு வெளியே பெரிய அளவிலான ஒலிபரப்பு நிலையமாக அமைய இருக்கிறது. இதற்கு வழங்கப்பட்ட 1000 ஏக்கர் நிலத்தில் எவ்விதமான கட்டுப்பாடும் காணப்படமாட்டாது. அதி குறைந்த அதிர்வலைகளை (E L F) பெறக் கூடியதாகவும் அஞ்சல் செய்யக் கூடியதாகவும் இந்நிலையம் அமையும். டியூக்கோ கார்ஷியாவில் இடவசதி பற்றாக்குறை காரணமாகவும் தனது நீர்மூழ்கிக் கப்பற்படையின் செய்திகளைப் பெறவும் இங்கு இந்நிலையம் அமைக்கப்பட இருக்கிறது. இந்த ELF தொடர்பு வசதி அதிஆழத்திற்கு நீரினுள் செல்லும் தன்மை கொண்டதாலும் தடைகள் குறைவாகக் காணப்படுவதாலும் 'நியூக்கிளியர்' ஏவுகணை நடவடிக்கைகளுக்கு உபயோகப்படக் கூடியதாலும் இந்து சமுத்திரத்தில் தனது நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் வகையிலுமே ஐக்கிய அமெரிக்காவினால் இந்நிலையம் நிறுவப்பட இருக்கிறது. அதாவது வல்லரசுப் போட்டியில் ஸ்ரீலங்கா ஐக்கிய அமெரிக்காவிற்கு தளமொன்றினை அமைத்துள்ளதாகவே இதனைக் கருதமுடியும்.

### மன்னார் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

LTTE. மன்னார்

கடந்த 10-5-85 அன்று மன்னார் போலிஸ் நிலையம் மீது விடுதலைப் புலிகளினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல் ஒன்றரை மணித்தியாலங்கள் வரை நீடிக்கப்பட்டதுடன் பல பொலிசார் பலியாக்கப்பட்டனர் என விடுதலைப் புலிகள் உத்தியோகப் பூர்வமாக அறிவித்துள்ளனர். மேலும் தமது அறிவிப்புக்களில் பல போலிசார் உயிருடன் கைது செய்யப்பட்டதாகவும் நவீனரக துப்பாக்கிகள் ரவைகள், வெடி மருந்துகள் என்பனவும் கைப்பற்றப் பட்டதாகவும் கூறியிருந்தனர்.

www.padippakam.com



# அராஜகவாதமா? விடுதலைப் போராட்டமா?

அதிகரித்து வரும் நெருக்கடிகள், பொருளாதாரச் சுமைகள் இயக்கங்கள் எனப்படுவோரின் இராணுவச் செயற்பாடுகள், அதற்கான பதிலடிகள் எனப் பல வாருக நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் மக்க டையே இருந்து பலவாருன கேள்விகள் இன்று இயக்கங்களை நோக்கி எழுப்பப்படுகிறது. தமக்குள் ஐக்கியம் காண முடியாத இவ்வியக்கங்கள் போராட் டத்தை முன்னெடுக்குமா? போராட்டத்தில் எமக்கு வெற்றி கிடைக்குமா? அல்லது இது சிறுபிள்ளை செய் யும் வேளாண்மைதானு? இந்தியா ஏன் இவ்வளவு காலமும் எதுவும் செய்யாமல் இருக்கிறது? எமக்கு வெளிநாட்டு ஆதரவுகள் ஆக்கபூர்வமாக கிடைக்குமா? இப்படிப் பலவாருக கிளம்பும் சிந்தனைப்பாடுகளுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியமும் கடமையும் எமக்கு உள்ளது.

ஒரு போராட்டம் வெற்றிபடைவதற்கு அதாவது மக்கள் போராட்டமாக மலர்ந்து, புரட்சியாகப் பரி ணமம் பெறுவதற்குச் சில சூழ்நிலைகள் அவசியம்.
1. அராஜகமான அரசு அதன் மனிதாபிமானம் அற்ற அடக்கு முறைகளும், இராணுவக் கெடுபிடிகளும்
2. சாதகமான சர்வதேச நிலைமையும் அரசுக்கு எதிரான பொது அபிப்பிராயமும்.

முதலாவதனை எடுத்துக் கொண்டால் '77ன்' பின்னுல் ஜே. ஆர். அரசு, அடக்கு முறையினை அதி உச்ச நிலைக்கு பாசிச சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்வது கண்கூடு. சாதாரண சிவில் சட்டங்களால் இன ரீதியாக—மொழிரீதியாக காட்டப்பட்ட ஒடுக்கு றை இன்று வளர்ந்து தமிழ் பேசுவோர் அனைவரை யும் பயங்கரவாதிகளாக சந்தேகிக்கும் நிலைக்கும் அவர்கள் அனைவரையும் எமது ''எதிரிகள்'' என நடத்தும் நிலைக்கும் அரசு சென்று விட்டது. இதனுல் மக்களனைவரும் இவ்வரசின் கீழ் தமக்கு நேர்மையான நீதி, மனிதாபிமான அணுகுமுறை எதுவும் கிடைக் குமென எதிர்பார்க்க முடியாமையினுல் போராட வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டு உள்ளனர். அரசின் செயல் முறைகளில் நம்பிக்கை கொள்ள முடியாமையினுல், வெறுக்க வேண்டிய நிலைக்கும் எதிர்க்க வேண்டிய நிலைக்கும் மக்கள் தள்ளப்பட்டுள் ளனர்.

இரண்டாவதாக, உள்நாட்டில் இத்தகைய எதிர்ப் பைச் சம்பாதித்துக் கொண்ட அரசு சர்வதேச ரீதியாக ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. அமெரிக் காவின் கைப்பொம்மையாகப் போயுள்ளது. ''80—ம் ஆண்டில் கொழும்பில் கூடுவதெனத் தீர்மானிக்கப் பட்ட'' இந்து சமுத்திரத்தைச் சமாதானப் பிராந்திய மாகக் கோரும் மாநாட்டை இன்னும் கூட்டாததும், தெற்காசியப்பிராந்தியத்தில் அமெரிக்க நண்பர்களான ''ஆசியான்'' (ASEAN) கூட்டமைப்பில் அங்கத் துவம் பெற்றதும் தமிழ் பேசும் மக்களின் போராட் டத்தை நசுக்க இசுரேலை வரவழைத்ததும், அண்மையில் ஜே. ஆர். பாகிஸ்தானின் இராணுவ சர்வாதிகாரி சியா-வுல்-ஹக்குடன் கைகோர்த்துக் கொண்டதும் இன்னும் பலவும் ஜே. ஆர் ஏகாதிபத்தியத்துடன் தம்மை இனம் காட்டத் துணை நின்றன. இவ்வாருக அரசு, தனது நடுநிலைமைக் கொள்கையிலிருந்து நழுவிப் போய் ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளமையானது, உலக சமாதான விரும்பிக ளின் நலனுக்கு எதிரானதாகும். இதனுல் உலகின் சோசலிச முகாமும், விடுதலைக்காகப் போராடும் நாடு களும், புரட்சிகர சக்திகளும், ஏகாதிபத்திய எதிரி களும் ஒடுக்கப்பட்டுப் போராடும் எமது மக்களின் போராட்டத்தை ஆதரிக்கவும் அங்கீகரிக்கவும் செய்வர் என்பது வெளிப்படை. இதனுலேயே அரசு, இது தமிழ் பேசும் மக்களின் போராட்டம் என்பதனை மறுத லித்து, பயங்கரவாதப் பிரச்சினை'' யாகவும் இலங்கை யைச் சிவப்பாக்க எத்தனிக்கும் மார்க்சிய-லெனினிச- கம்யூனிச சக்திகளின் சதி என்றும் இன்னபிறவாருகவும் பிதற்றத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு நாம் கூறுவதைக் கொச்சைப்படுத்தும் சிலர், ''ஏதோ வெளிநாட்டில் இருந்து துருப்புகளை வரவழைக்க போவதாகவும்'' எண்ணெய்ச் சட்டியில் இருந்து தப்பி, நெருப்புக்குள் பாய முயற்சிப்பதாக வும்'' இன்னும் பலவாருகவும் குறை கூறுகின்றனர். இவர்களுக்கு நாம் சொல்லக் கூடிய ஒன்றுதான். ஒரு புரட்சியாளன் ஒரு முறை கூறியதுபோல, ''குஞ்சு பொரிப்பது முட்டைதான், ஆனுல் அடைகாத்தல் என்ற பெயரில் ஒரு வெளிப்புறத்தாக்கம் இல்லையா னுல் ''குஞ்சு பொரிப்பது எப்படிச் சாத்தியமில்லையோ, அப்படித்தான் ஒரு புரட்சியில் வெளிப்புறச் சக்திகளின் செயற்பாடுகளும்'' அதாவது புரட்சியில் தீர்க்கமான பாத்திரம் மக்களுக்கும், அகமுரண்பாடுகளுக்கும் தான். ஆனுல் புறச்சூழல் சாதகமாக இல்லா விட்டால் புரட்சி பிசுபிசுத்துப் போகும் என்பதைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்பதைத்தான்.

இந்தச் சூழ்நிலையைப் புரிந்து கொண்டால், எமது மக்கள் போராட வேண்டிய நிலைமையினை உணர்ந்து கொள்ளலாம். இந்நிலைமைகளும், இவை கள் மக்கள் மத்தியில் பிறப்பித்த உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளுமே இயக்கங்களாகும். அதாவது மக்க ளிடம் உள்ள எதிர்ப்புணர்ச்சியின் வெளிப்பாடுகளே இயக்கங்களின் செயற்பாடுகள். இதனை எதிரி புரிந்து கொண்டிருப்பதாலேயே சுடப்படும் அனைவரும் பயங் கரவாதிகளாகக் காட்டப்படுகின்றனர். போராட் டத்தை முன்னெடுக்கும், வழி நடத்தும், பொறுப்பு இயக்கங்களிடம் இருக்கிறது. இந்த இயக்கங்கள் தங் களுக்கெனச் சில போராட்ட வழி முறைகளைக் கடைப் பிடிப்பதாகக் கூறுகின்றன. ஒரு சாரார் ''கெரில்லாப் போராட்டமே தமது வழி முறை'' என்றும் இன்னும் ஒரு சாரார் ''ஒட்டு மொத்தமான மக்கள் போராட்டம்; ஒரே தாக்குதல்'' அதுவே இறுதித்தாக்குதல்'' என்றும் இன்னும் சிலர் தாக்குதல்களே எமது எண்ணம் என்றும் இன்னும் சிலர் மக்கள் ரீதியான ஒரு எழுச்சி ஒன் றைத் தோற்றுவித்தல் என்றும் பலவிதமான சிந்தனை

> ❝
>
> எந்த ஒரு இராணுவப் பாதையும் அரசியற் பாதையிலேயே தங்கியிருக்கிறது. அரசியற் பாதை யையே வெளிப்பாடு செய்கிறது. கடந்த சில ஆண்டு களாக அந்நியமான இராணுவக் கோட்பாடுகள் ஆயு தப் போராட்டம் என்ற ரீதியில் பரீட்சார்த்தம் செய்யப் பட்டு கெரில்லாப் போராட்டத்திற்கு முற்றிலும் மாறுபட்ட அர்த்தத்தைக்கொடுக்க விழைந்தன. இராணுவத்திட்டம் என்ற மாறுவேடத்தைப் பூண்டி ருந்த, இறக்குமதி செய்யப்பட்ட அரசியல் சித்தாந்தங் களாகும். வேறு எங்கோ வேரூன்றிய இச்சிந்தாந் தங்கள் முற்றிலும் மாறுபட்ட வரலாற்றுச் சூழ்நிலை களில் பரிசோதனை செய்யப் பட்டது.
>
> —ரெஜிஸ் டெப்ரே—
>
> ❞



ஓவியம்: சந்தானம்.

களின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

### அராஜகவாதம் விடுதலைப் போராட்டமல்ல.

ஆனுல் இவை எல்லாவற்றையும் மறுதலித்தும் நிராகரித்தும் செயல்படும் சிலர் ''அராஜகம்'' தான் போராட்ட வடிவம் எனக் கருதுகின்றனர். அதாவது, அரசுக்கு எதிராக செயற்படுகின்ருேம் என்ற உணர் வின் அடிப்படையில் கண்மூடித்தனமாகச் செயற் படுவதனை ''அராஜகம்'' என வரையறை செய்ய லாம். தனிநபர்களின் நலன்களை முதன்மைப்படுத் தும் இவ் அராஜகவாதம் சமூக நலனுக்கும் ஏன் சோசலிச நிர்மாணத்திற்கும் முற்றிலும் விரோத மானது. பொது சனங்களின் அன்ருட அத்தியாவ சியத் தேவைகளான உணவு விநியோகம், வைத்திய வசதிகள், செய்திப்பரிவர்த்தனை, போக்குவரத்து, மின் விநியோகம் போன்ற துறைகளைச் சீர்குலைக்க எடுக்கப்படும் முயற்சிகள்; சேவை அடிப்படையில் செயலாற்றும் இந்நிறுவனங்களில் மேற் கொள்ளப் படும் கொள்ளைகள் என்பனவற்ருல் மக்கள் பெரும் பாதிப்புகளுக்கு உடனடியாக இலக்காகுவது நிச்ச யம். உதாரணமாக செய்திப் பரிமாற்றத் துறையில் தொலைபேசிகளின் பங்கு முக்கியமானது. ஆனுல் தொலைபேசிக் கம்பிகளைத் தமது சொந்த நலன் கருதி அறுத்துச் செல்வதும், பின் காவலிடப்படாத அக்கம் பிகளைப் பாவித்து சட்டவிரோத மின்பாவனைக்குப் பயன்படுத்துவதும் அராஜகவாதத்தின் வெளிப்பாடு கள். அதேபோல் கமநலத் திணைக்களத்திற்குச் சொந் தமான நெல்லைக் கொள்ளையடித்து விட்டு, இது சிங்கள நாட்டுக்கு அனுப்பப்பட இருந்தது எனக் கூறுவதும் கூட அராஜகத் தனத்தின் வெளிப்பாடே. அதாவது விடுதலைப் போராட்டத்தின் பெயரால் சிவில் நிர்வா கம் சீர்குலைக்கப்பட்டு இருப்பதனை தமது நலனுக்குப் பயன்படுத்தும் இச்சக்திகள் தானடித்த மூப்பாக- எம்மை யார் கேட்க முடியும் என்ற தோரணையில் செயல்படுவது சமூகத்திற்குப் பெரும் கேடு பயப்ப தாகும். அராஜகவாதமா? சோசலிசப் போராட்டமா? என்னும் தமது நூலில் இப்பிரச்சினைகள் குறித்துத் தெளிவாக விளங்க வைக்கும் தோழர் ஜே.வி. ஸ்டாலின் பின்வருமாறு கூறுகிருர். ''மார்க்சிசம், அராஜகவாதம் ஆகிய இவ்விரண்டும் சோசலிசத்தை அமைப்பதற் காகப் போராடுவதாக சொல்லிக் கொண்ட போதிலும் இவை இரண்டும் முற்றிலும் மாறுபட்ட கொள்கையின் அடிப்படையில் எழுந்தவை. அராஜகவாதம் தனி மனி தனை மையமாகக் கொண்டது. தனிமனிதனின் விடு தலை பொது மக்களின் விடுதலைக்கு முதற்படி ஆகும். தனி மனிதன் விடுதலை பெறும் வரை பொது மக்க ளின் விடுதலை சாத்தியம் இல்லை; எனவே ''ஒவ்வொன் றும் தனி நபருக்காக'' என்பது அராஜக வாதிகளின் கொள்கை. மார்க்சீயம் பொதுமக்களை மையமாகக் கொண்டது. தனிமனிதனின் விடுதலைக்கு முதற்படி பொது மக்களின் விடுதலையே ஆகும். அதாவது பொது மக்கள் விடுதலை பெறும் வரை தனிமனிதனின் விடுதலை சாத்தியமில்லை. எனவே 'ஒவ்வொன்றும் மக்களுக் காக'' என்பது மார்க்சீயக் கோட்பாடு. எனவே அராஜகவாதமும் மார்க்சீயமும் போராட்ட தந்திரத் தில் மாறுபட்டவை என்பது மட்டுமல்ல. அவை ஒன்றையொன்று மறுக்கும் இருவேறு கோட்பாடு கள்'' ஆகும் என்பதைப் பொது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### போராட்ட முறைகளின் வளர்ச்சியும் இன்றைய நிலையும்

இந்தப் பின்னணியில் நாம், எமது மக்களின் போராட்ட முறைகளில் ஏற்பட்ட வளர்ச்சி பற்றியும், போராட்ட வடிவங்கள் வளர்ந்த விதங்கள் பற்றியும் ஆராய்வதோடு, இன்றைய நிலையையும் புரிந்து கொண்டால், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி எஃக லாம். ஆரம்பத்தில்- அதாவது இன ரீதியான ஒடுக்கு முறை ஆரம்பமான போது சட்ட வரையறைகளை மீருத அமைதியான எதிர்ப்புக்கள், உண்ணுவிரதம், சத்தியாகிரகம் என்ற வகையில் வெளிப்படுத்தப்பட் டன. ஐம்பதுகளின் பின் இது சற்று மாறுதல் கண்டு சாதாரண சிவில் சட்டங்களை ஓரளவு மீறும் செயலாக சட்ட விரோத ஊர்வலம், ஆர்ப்பாட்டம், கடை யடைப்பு, கர்த்தால் என விரிவு பெற்றது. இது மேலும் விரிவுபட்டு கறுப்புக் கொடி காட்டுதல், தேசியக்கொடி எரிப்பு, தேச உடைமைகளை நாச மாக்குதல் என விரிகையில் வலுவான எதிர்ப்பியக் கத்தின் அவசியம் உணரப்பட்டது. இத்தகைய ஆயுதம் தாங்கிய எதிர்ப்பு நடவடிக்கைகள் எழுபது களில் உதயமாகின. தொண்டைமானுறு பாடசாலை யில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு விபத்தையடுத்து அப்போதையப் பிரதிக் கல்வியமைச்சர் சோம வீரசத் திரசிறியின் காருக்குப் பொருத்தப்பட்ட வெடிகுண்டு என்றவாருக வன்முறை எதிர்ப்பு சக்திகளின் செயல் கள் வேகம் பெற்றன. வெடிகுண்டுகள் பொருத்தல், பார்சல் குண்டுகள் என ஆரம்பித்து அரச ஆதரவுகளை அழித்தல், உளவுப்படையைச் சிதைத்தல், பொலிஸ் நிலையங்களைத் தகர்த்தல், இராணுவத்துடன் மோதல் என்றவாருக எமது மக்களின் போராட்ட வடிவங்கள் காலத்திற்குக் காலம் வெளிப் படுத்தப் பட்டன. இந்த வகையான வளர்ச்சிகள் ஈழத்தின் எல்லாப் பிராந்தியங்களுக்கும் எல்லா மாவட்டங் களுக்கும் பொதுவாகவே காணப்படுகின்றன.

இன்றைய நிலைமை என்ன? வடக்கைப் பொறுத் தவரை சாதாரண பொலிஸ் சேவைகள் ஏறத்தாழ முற்ருகச் சிதைக்கப்பட்டு இராணுவத்துடன் நேரடி யாக மோத வேண்டிய நிலைக்கு இட்டுச் சென்றுள் ளது. கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்தும், ஆயுதப்படை முகாம்களை முற்றுகையிட்டும் முன்னணி இயக்கங்கள் இராணுவ செயற்பாடுகளில் முன்னேறி யுள்ளன. கிழக்கில் பொலிஸ் சேவைகள் சுமாராக அமுல்படுத்தப் படுவதோடு, ஆயுதப்படையினரதும், குடியேறிய குண்டர் கூட்டத்தினதும் செயற்பாடு களினுல் மக்கள் துன்பப்பட நேர்கிறது. அத்துடன் இப்பிராந்தியங்களின் இராணுவம் புவியியல் அம்சங் கள் எதிரிக்குப் பெரும்பாலும் சாதகமாகி விடுகின்றது. மலையகத்தைப் பொறுத்தவரையில் விழிப்புணர்ச்சி பெருமல், தொழிற்சங்கங்களிடம் அன்ருடப் பிரச் சினைகளுக்காக அடிமைப்பட்டிருக்கும் மனோ நிலையும், அரசின் நாசூக்கான அடக்குமுறையும், போராட்டத் தயாரிப்புகளைத் தடைபடுத்தும் அம்சங்களாகும்.

### எதிர்காலம் என்ன?

எனவே, எதிர்காலத்தில் பரந்துபட்ட மக்கள் எழுச்சி ஒன்றை பரந்துபட்ட மக்கள் அணி திரண்ட 'கிளர்ச்சி ஒன்றை (Mass Violence) வெவ்வேறுபட்ட தொழிற்துறைகளைச் சார்ந்தவரும், சாதாரண பொது மக்களும்கூட தமது எதிர்ப்பை வெளிப்படுத்தக்கூடிய போராட்ட வடிவம் ஒன்றை இயக்கங்கள் அறிமுகப் படுத்தியாக வேண்டும். இத்தகைய மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்திய போராட்ட வடிவங்கள் ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாடுகளின் அரசியல்-சமூக- பொருளாதார நிலைமைகளுக்கேற்ப அந்தந்த நாட்டு மக்களால் அறிமுகப்படுத்தப்பட்டேயிருக்கின்றன. இவற்றை ஆழமாகப் பரிசீலிப்பதன் மூலம் எமது மக்கள் இந்த அரசின் மீது தமக்குள்ள வெறுப்பை எதிர்ப்பை வெளிப்படுத்தும் ஒரு போராட்ட முறை யினை அறிமுகப்படுத்தி- அமுல் நடத்துவதன் மூலமே மக்கள் போராட்டம் ஒன்றை எமது மண்ணில் மலரச் செய்ய முடியும்.

# பொதுமை

**ஒன்று படுவோம்: போராடுவோம்**
**போராட்டத்தில் ஒன்றுபடுவோம்**

ஈழத்தின் விடுதலைக்காகப் போராடும் சக்திகள் - இயக்கங்களிடையே ஐக்கியம் ஏதும் இல்லையே; ஒற்றுமைப்படாமல் சிதறிச் சின்னாபின்னமாகி தத்தம் போக்கிற்கேற்ப செயற்படுகிறார்களே, எமது தாயகத்தின் விடுதலைக்காக தங்களை அர்ப்பணித்துப் போராடும் இயக்கங்கள் தமக்கிடையேயான வேறுபாடுகளை மறந்து ஏன் ஒன்றுபடக்கூடாது? எனப் பலவாறாக மக்கள் கடந்த காலத்தில் விசனப்பட்டதை பலரும் உணர்வர்; ஒற்றுமைப் படவில்லையே என ஒருவித ஆதங்கமும், ஒற்றுமைபடுவதில் உள்ள தடை எது என்பது பற்றிய ஒரு கேள்வியும், ஒற்றுமைப் பட்டால் போராட்டம் விரைவில் முடிவுக்கு வருமே என ஒரு அபிப்பிராயமும், மக்கள் மத்தியில் இருந்து வெளிப்பட்ட உணர்வின் பிரதிபலிப்புகள்.

இவ்வாறான உணர்வுகளை கருத்திற் கொண்டும், போராட்ட முன்னெடுப்பின் அவசியம் குறித்தும், போராட்டம் இன்று அடைந்திருக்கும் இக்கட்டான நிலைமையிலும், இது போன்ற இன்ன பிறகாரணிகளாலும் கடந்த ஏப்ரில் 10 முதல், ஈழவிடுதலை போராட்டத்தின் முன்னணி இயக்கங்கள் நான்கு இணைந்து ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்திச் செயற்பட இசைந்தன. இந்த ஐக்கிய முன்னணியைப்பற்றி பலரும் பலவாறாகப் பிரச்சாரம் செய்கின்றனர். இதென்ன ஐக்கியம்? ஒவ்வொருவரும் தாம் தாம் விரும்பிய இலக்குகளை (Targets) தாக்குகின்றனர். தாக்குதலில் ஐக்கியத்தைக் காணவில்லையே என ஒரு சாரரும். தாக்குகின்ற செய்திகூட ஏனைய இயக்கங்களுக்கு தெரியப்படுத்துவதில்லையே என ஒரு சாரரும், இது உண்மையான ஐக்கியம் இல்லை-வெறும் பேரளிக்கூட்டு என ஒரு சாரரும் பலவாறாகத் தம்மனம் போன போக்கில் பேசி வருகின்றனர். மேலும் சிலர் சில இயக்கங்கள் தம் நாளாந்த செயற்பாடுகளில் இழைக்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, இதனை இணைப்பில் சொல்லித் திருத்த முடியாதா? அல்லது நீங்கள் எல்லாம் இதற்கு உடந்தையா? எனக் கேட்கின்றனர். இன்னும் சிலர் இயக்கத் தலைமைகள் தமக்கெதிராக வரும் விமர்சனங்களைக் குறைக்கவே இவ் ஐக்கியக் கூட்டுக்களிலொளிந்து கொண்டுள்ளன எனக் குற்றம் சாட்டுகின்றனர். இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டியதும், இயக்கங்களிடையே உள்ள ஐக்கியத்தின் தன்மை குறித்தும் தெளிவாக்க வேண்டிய கடமைப்பாடும், பொறுப்பும் எமக்குண்டு.

ஈழத்தின் விடுதலைக்காக ஏறத்தாழ 5 ஆண்டுகளுக்கு மேலாக தனித்தனியே செயற்பட்டு வந்த இந்த இயக்கங்கள் ஒரு இரவிலோ (over night) அல்லது ஒரு சில மணித்தியாலங்களிலோ ஒன்றுபட்டு இயங்கச் சம்மதம் தெரிவித்து விடவில்லை. இந்த ஐக்கியம் ஏற்பட்டமைக்கு முன்னோடியாகப் பல நிகழ்ச்சிகள் நடந்தேறியுள்ளதை கவனத்தில் எடுக்கவேண்டும்.

முதலாவதாக 1982 இன் பிற்பகுதியில் ஒற்றுமைக்கான பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. இயக்கங்கள், ஐக்கியம் பற்றி தெளிவாக உணராது இருந்தமையினாலும், இப்பேச்சு வார்த்தைகள் வெற்றியளிக்க முடியவில்லை. இதன் பின்னர் கடந்த மூன்றாண்டுகளில் பல்வேறு கோணங்களில் பல்வேறு சக்திகள் இயக்கங்களிடையே இணைப்பையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டன. குறிப்பாக '83 கலவரத்தையடுத்து ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தீவிரமடைந்தன. பல்வேறு மட்டங்களிலும் ஐக்கியத்தின் அவசியம் உணரப்பட்டது. இவ்வேளையில் தமிழீழ விடுதலை இயக்கம் (TELO) ஈழப்புரட்சியமைப்பு (EROS), ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) ஆகிய இயக்கங்கள் 83 இன் இறுதிப் பகுதியில் தமக்குள் ஐக்கியப்படச் சம்மதித்து, அதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்த ஆரம்பித்தன. இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராட்ட சக்திகளின் ஐக்கியம் பற்றி 1984 ஏப்ரிலில் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்த அரசியற் கொள்கையின் அடிப்படையில், இவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகவே ஐக்கியம் என்பது ஏற்பட்டது. ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற ஒரே குடையின் கீழ் செயற்பட்ட TELO, EROS, EPRLF, கூட்டமைப்புடன், தமிழீழ விடுதலைப் புலிகளும் (L. T. T. E.) அண்மையில் இணைந்து போராட்ட சக்திகளிடையே வலுவான ஐக்கியம் வளர வழி வகுத்தது.

இவ்வாறாக ஒன்றுபட்டிருக்கும் அதே வேளை சமுதாயம் பற்றி ஒவ்வொரு இயக்கம் கொண்டுள்ள பார்வை, கருத்துகள், போராட்டத்தின் நடைமுறைகள் என்பனவற்றில் காணப்படும் வேறுபாடுகளினால், தனித்து செயற்பட வேண்டியவர்களாயுள்ளோம். எனவே ஒப்புக்கொள்ளப்பட்ட அரசியற் கொள்கையின் அடிப்படையில் ஒரே இயக்கமாக இந்நான்கு இயக்கமும் பரிணமம் பெற்று விடவில்லை. பதிலுக்குத் தனித்தனியே செயற்பட்டாலும், அடிப்படை அரசியற் கொள்கைகளில் வழுவாத உறுதியுடனும், தீவிர செயற்பாட்டுடனும், அர்ப்பணிப்பையும் தொடர்ந்தும் காட்டும் சக்திகளாக இவை திகழும்.

தெளிவாக வரையறுக்கப்பட்ட அரசியற் கொள்கைகளின் அடிப்படையில் திடசங்கற்பத்தோடு பேணும் உறுதியான செயற்பாட்டினுல் காட்டப்படும் ஐக்கியத்தினுல் மட்டுமே, ஈழப் போராட்டத்தைத் துரிதப்படுத்தவும் தாயகத்தை வென்றெடுக்க முடியும்.

வெளியீடு:
ஈழப் புரட்சியமைப்பு
EROS
தொடர்பு:
ஈழம்
த. பெ. எண்: 2356
சென்னை - 600 024

20-05-85, அன்று ஈழத்தில் வெளியான இவ்விதழ்
கடல் கடந்து வாழும் தோழர்களுக்காக
சென்னையில் மறுபதிப்புச் செய்யப்பட்டு 20-07-85 ல்
வெளியிடப்படுகிறது

# இன்றைய தேவை இயக்கங்களின் ஐக்கியம்

பாரதம் மீண்டும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கி இருப்பதும், சிறிலங்கா அரசானது கூட்டணியினருடன் தான் பேசத் தயாராக இல்லை எனக் கூறியிருப்பதும், அவ்வாறுயின் ஈழப் பிரச்சனை சம்பந்தமாக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தப் போவது யார்? மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கப் போவது யார்? என்ற கேள்வியையும் மக்கள் மத்தியில் விஸ்வரூபம் எடுக்கச் செய்துள்ளது. இதனுல் இன்றைய நிலையில் ஈழவர்களுடைய அரசியல் தலைமைத்துவம், பிரதிநிதித்துவம் என்பன வெற்றிடமாகக் காணப்படுகின்றன. எனவே முன்னெப்போதும் இல்லாத வகையில் போராட்டச் சக்திகளின் மத்தியில் ஐக்கியம் என்பது மிகத் தேவையானதும், அவசியமானதுமாக வடிவெடுத்துள்ளது.

இன்று ஈழம் வாழ் மக்களின் மத்தியில் விடுதலை இயக்கங்களின் நடவடிக்கைகளை இட்டு பயம், கவலை, விரக்தி, அதிருப்தி போன்ற கசப்புணர்வுகள் நிலவி வருகின்றன. முன்பெல்லாம் சிறிலங்கா அரசினதும் அதன் கூலிப்படைகளினதும் கொடுமைகளைக் கண்டு அஞ்சாத, நம்பிக்கையிழந்து விடாத மக்கள் இன்று போராட்டத்தின் மீதும், போராட்டச் சக்திகளின் மீதும்போராட்ட சக்திகளின் செயற் திறன் மீதும் சந்தேகம் கொள்ளத் தொடங்கி விட்டனர். ஒரு தனிப்பட்ட இயக்கத்தின் ராணுவ நடவடிக்கையினுலோ, அல்லது பிளவு பட்டுப் போய் தன்னிச்சைப் போக்கில் செயல்படும் இயக்கங்களின் நடவடிக்கைகளினுலோ, தமக்கு அடிப்படைச் சமுதாய பொருளாதார மாற்றங்களுடன் கூடிய தாயகம் அமைந்து விடாது என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளார்கள்.

இதே வேளையில் பாரதம் மீண்டும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண சிறிலங்கா அரசுடன் பேச்சு வார்த்தையைத் தொடங்கி இருப்பதும், சிறிலங்கா அரசானது கூட்டணியினருடன் தான் பேசத் தயாராக இல்லை எனக் கூறியிருப்பதும், அவ்வாறுயின் ஈழப் பிரச்சனை சம்பந்தமாக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தப் போவது யார்? மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்கப் போவது யார்? என்ற கேள்வியையும் மக்கள் மத்தியில் விஸ்வரூபம் எடுக்கச் செய்துள்ளது. இதனுல் இன்றைய நிலையில் ஈழவர்களுடைய அரசியல் தலைமைத்துவம், பிரதிநிதித்துவம் என்பன வெற்றிடமாகக் காணப்படுகின்றன. எனவே முன்னெப்போதும் இல்லாத வகையில் போராட்டச் சக்திகளின் மத்தியில் ஐக்கியம் என்பது மிகத் தேவையானதும், அவசியமானதுமாக வடிவெடுத்துள்ளது.

ஈழவர்களின் போராட்டமானது ஏகாதிபத்திய அமெரிக்கா, அண்டைய பாரதம் போன்ற நாடுகளின் நலன்களுடன் பின்னிப் பிணைந்துள்ளமை பலரும் அறிந்ததே. இவ்வாறு இன்று பல அந்நிய சக்திகளும் தமது நலன்களைப் பேணிக் கொள்வதற்காக, ஈழவர் போராட்டத்தை முடக்கவோ அன்றி பயன்படுத்தவோ முனைகின்றன. ஆரம்பத்திலிருந்தே ஈழப் பிரச்சனையை உற்று நோக்கி வந்த இந்தியா, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கை சிறிலங்காவில் ஓங்கி விடாது தடுப்பதற்காக ஈழப் போராட்டத்தைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது. அரசியல் ரீதியாக ஸ்தாபனமயப்படுத்தப்படாத எமது மக்களும் இந்திய அரசின் அரசியல் ரீதியான தலையீட்டை ஈழவர்களின் போராட்ட வடிவமாக எண்ணத் தொடங்கி அந்த சிந்தனைப் பாட்டிலேயே முற்றாக அமிழ்ந்து போயினர். எனவே விடுதலைப் போராட்டத்தில் தமது பங்களிப்பும் உண்டு என்பதை முற்றாக மறந்து பாரதத்தின் தீர்ப்புக்கே எமது தலைவிதியை முற்றாக சமர்ப்பணம் செய்ய முனைகின்றனர்.

போராட்டச் சக்திகளும் தமது ஆட்சேகரிப்பு யுக்தியாக ''தமது ஸ்தாபனங்களுக்கே பாரதத்தின் ஆதரவுண்டு'' என்ற கருத்தை மக்களிடையே பரப்பி இயக்கங்களுக்கு ஆள் சேகரிக்கும் வேலையில் முழு மூச்சாக ஈடுபட்டு வருகின்றன. இதன் மூலம் அரசியல் விழிப்புணர்வுடனும், தீர்க்கமான சிந்தனையுடனும் போராட வேண்டிய இயக்கங்கள் வெறும் ஆட்கும்பலை விரிவுபடுத்திக் கொண்டும், அதே வேளையில் மக்கள் போராட்டத்திற்கு எதிரான சக்திகளை தம்மிடையே தம்மை அறியாமலே வளர விட்டுக் கொண்டும் வருகின்றன. இவ்வாறு போராட்டச் சக்திகளின் கவனம் திசை திரும்பியுள்ள நிலைமைகளைப் பல அந்நிய சக்திகளும் பயன்படுத்த முனைகின்றன.

இன்று ஓரளவு ஸ்தாபனமயப்படுத்தப்பட்டுள்ள இயக்கங்கள் காணப்படுகின்ற போதிலும், 28 பிரிவுகளுக்கு மேலாகப் போராட்டச் சக்திகள் பிரிந்து நின்று செயலாற்றுகின்றன. இவ்வாறு கப் பிளவு பட்டுப் போயுள்ள இயக்கங்கள் முன்வைக்கும் கருத்துகளில் உள்ள முரண்பாடுகளிலும் பார்க்க, தனிப்பட்டபோட்டி பொறுமைகள், அரசியல் கண்ணேட்டமில்லாமை, மக்களின் நலன் மறந்து குழு நலன்களைச் சார்ந்து இயங்குவது போன்ற அம்சங்களே இவர்களின் ஐக்கியமின்மைக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. இவ்வாறுன காரணங்களினுல் கூர்மையடைந்த நிலையும் சிறிலங்கா இராணுவத்தின் வலிமைப் பெருக்கமும் உண்மையான ஐக்கியப்பாட்டினுல் மட்டுமே எமது அபிலாசைகளை வென்றெடுக்க முடியும் என்பதை தெளிவுத்படுத்துகின்றன.

சிறீலங்கா இராணுவமானது இஸ்ரேலிய 'மொசாத்'தினுலும், பிரித்தானிய ''SAS'' கூலிப்படையினராலும், சீன இராணுவ ஆலோசகர்களாலும் பயிற்றப்பட்டு வருகிருர்கள் என்பதையும், இராணுவ இயந்திரத்தின் தேர்ச்சியையும், திறமையினையும் முன்னைப் போல் குறைத்து எடை போட முடியாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவற்றுக்கு சான்று பகர்வது போல அண்மைக் கால தாக்குதல்களில் சில தோல்விகளைத் தழுவியதைக் குறிப்பிடலாம். அண்மைக்கால தாக்குதல்களில் வெற்றிகள் பற்றி குடா நாட்டின் சுவர்கள் மட்டுமே பறை சாற்றுவதும் சம்பவங்கள் நடைபெற்ற இடங்களில் மக்களின் நேர்முக வர்ணனைகள் சுவரொட்டிகளில் உள்ள செய்திகளுக்கு தலைகீழானதாக இருப்பதும் இவ்விடங்களில் சுவரொட்டிகள் அலங்கரிக்காததும் உண்மை நிலையைத் தெள்ளத் தெளிவாக்குகின்றன.

இயக்கங்களிடையேயான ஐக்கியமின்மையே ஈழப் போராட்டச் சக்திகளின் தேக்க நிலைக்கு காரணம் என்ற உண்மை நிலை விளங்கிய இராணுவத்தினருக்கும் (அரச இராணுவத்தினுல் யாழ்நகரில் விநியோகிக்கப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.) அரச அமைச்சர்களுக்கும் புரியும்போது மக்களுக்காகப் போராட்டம் நடத்தும் போராட்டச் சக்திகளுக்கு மாத்திரம் புரியாதிருப்பதையிட்டு மக்கள் சந்தேகமும், விரக்தியும் அடைவது நியாமானதே.

இந்நிலையில் போராட்டச் சக்திகளின் ஐக்கியத்திற்கு மூன்று வகையான சாத்தியக் கூறுகள் இருப்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

1. ஈழவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பாரதம் இயக்கங்களை நிர்ப்பந்தித்து ஒற்றுமைப்படுத்துவது (Froced or Imposed Unity) இந்த வகையான ஒற்றுமைப்பாடு ஒரு திணிப்பின் பேரில் ஏற்படுத்தப்படுவதால் போராட்டச் சக்திகளுக்கிடையேயான தனிப்பட்ட முரண்பாடுகள், குழு நலன்கள் முற்றாக மறைந்து விடாது. இதனுல் இவ்வகையில் உருவாகும் ஐக்கியபாடானது போராட்டச் சக்திகள் அவற்றின் முழுமையான ஆற்றலுடன் செயல்படுவதை மட்டுப்படுத்தி விடும்.

2. சிறீலங்கா அரசின் கெடுபிடிகளும், அரச இராணுவத்தின் அட்டூழியங்களும், அதிகரித்த நிலையில் இவற்றைக் சகித்துக் கொண்டிருக்க முடியாத இயக்கங்கள்-போராட்டக் களத்தில் இணைவதாகும். இவ்வகையான ஐக்கியப்பாடு ஆரம்பத்தில் ஒரு தற்காப்பு நடவடிக்கையின் அடிப்படையிலான (Unity Based on defensive purposes) ஒருமைப்பாடாக உருவானுலும் காலப்போக்கில் போராட்டச் சக்திகளின் உண்மையான ஐக்கியத்திற்கு இது வழிசமைக்கும்.

3. தெளிவான கொள்கையும், அரசியல் முதிர்ச்சியும், கட்டுப்பாடும், செயற்றிறனும் கொண்ட ஒரு இயக்கத்தினதோ அல்லது ஒரு கூட்டின் பின்னணியிலோ எல்லா இயக்கங்களும் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தலாகும். இதுவே ஈழவர்கள் அவர்களின் உரிமைகளை உடைமைகளை முற்றாகப் பெற்றுக்கொள்ள மிகச் சிறந்த வழியாகும்.

இந்த மூன்று வகையான சாத்தியங்களும் தவிர்ந்த வேறெந்த ஐக்கியப்பாடும் செயற்றிறன் அற்றதாகவே இருக்கும். எனினும் இயக்கங்களுக்கிடையிலான ஐக்கியம் என்பது ஓரிரவிலோ அல்லது ஓரிரு நாட்களிலோ ஏற்பட்டு விடவில்லை.

போராட்டச் சக்திகளிடையே ஐக்கியத்தின் அவசியம் பற்றி பலரும் உணரும் இவ்வேளையில் இயக்கங்களிடையில் இணைப்பை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பயனுகவும் ஈழப்புரட்சியமைப்பு ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய மூன்று இயக்கங்களும் தொடர்ந்து சிந்தித்ததன் விளைவாக ஏற்பட்ட இணக்கத்தையடுத்து 84 மே 10இல் கூட்டமைப்பு பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆயினும் இயக்கத்தினர் ஒருவரோடு ஒருவர் முகங்கொடுத்துப் பேசாத நிலையில் இருந்து சில இயக்கத்தினர்களுக்கிடையேயாவது புரிந்துணர்வு வளர வித்திட்டு தற்போது TELO, EPRLF, LTTE, EROS ஆகிய இயக்கங்களுக்கிடையே நிலவுவது போன்ற கூட்டினை [ஒருமைப்பாட்டின், ஐக்கியத்தின் ஆரம்பநிலையில் கருத்தில் கொள்ளாது விடவும் முடியாது.

எனவே ஈழவர்களின் விமோசனத்திற்காகப் போராடிவரும் சக்திகளின் ஐக்கியம் ஒரு விரைவான தேவையாகும், அன்றேல் இரவல் தாய் நாடு பெற்றவர்கள் என்ற நிலைக்கு எமது மக்களின் நலன்களை அடகு வைக்கக் காரணமானவர்கள் என்ற பழிக்கும் போராளிகள் ஆளாகும் நிலை ஏற்படுவதுடன், பின்னரும் தொடர்ச்சியான சமுதாய, பொருளாதார அடக்கு முறைகளுக்கும் உள்ளாக வேண்டியே ஏற்படும்.

□